உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 26 சனிக்கிழமை (08-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 73

# வன்னி படை நடவடிக்கை தொடரும் என்கிறார் தளபதி!

## நேற்றைய தாக்குதல் குறித்து தெளிவான அறிவிப்பு இல்லை

கொழும்பு, பெப்ரவரி 8

" கடந்த செவ்வாய்க்கிழமையன்று வவுனியாவிலிருந்து படையினர் ஆரம்பித்திருக்கும் 'எடிபல' (துணிவான சக்தி) இராணுவ நடவடிக்கை தங்கு தடையில்லாமல் தொடரும். புலிகளையும் அவர்களின் நிலைகளையும் ஒழித்துக் கட்டும் வெற்றிக்கு இது இட்டுச் செல்லும். "

-- இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் றோஹான் தலுவத்த தெரிவித்தார்.

**எனினும் படை நடவடிக்கை ஆரம்பித்து நான்காம் நாளான நேற்று நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்றதா என்பதை ஊர்ஜிதப்படுத்தும் தெளிவான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.**

சரியாகத் திட்டமிட்டு எதிரிகளின் நிலைகளை அழித்தொழிக்கும் கடமையைப் படையினர் நிறைவேற்றி வருகின்றார்கள் என்று இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் —

இந்த நடவடிக்கை குறித்து 'த ஐலண்ட்' பத்திரிகைக்குத் தகவல் வெளியிட்ட இராணுவத் தளபதி —

''இந்த நடவடிக்கையின் இறுதி இலக்கு எது என்பதை பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்போது வெளியிட முடியாது. ஆனால் பல திசைகளில் படையினர் முன்னேறி வருகின்றனர் என்பதையும் புலிகளின் எதிர்ப்பு அதிகம் இருக்கவில்லை என்பதையும் இப்போது கூறமுடியும்'' — என்று தெரிவித்தார்.

ஆனால் —

'எடிபல' இராணுவ நடவடிக்கை நான்கு நாள்களின் பின் இடைநிறுத்தப் பட்டு விட்டதாகவும் —

வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் இருமுனைகளில் நடத்தப்பட்ட படைநகர்வின் அடுத்த கட்டம் என்னவென்பது அறிவிக்கப்படவில்லை எனவும் —

'வெரித்தாஸ்' வானொலி குறிப்பிட்டது.

மடுவுக்குப் பிரியும் வவுனியா வீதிச் சந்திப்பில் படையினர் முகாமிட்டுள்ளதாகத் தெரிகின்றது. இதன் பின்னர் படைகள் மடு நோக்கி

(8ஆம் பக்கம் பார்க்க)

### மாவடிவேம்புத் தாக்குதலின் போது

## காணாமற்போன 6 படையினரில் மூவர் சடலங்களாக மீட்பு!

கொழும்பு, பெப். 8

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள மாவடி வேம்பு இராணுவ முகாம் கடந்த ஞாயிறு இரவு புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான போது காணாமற்போன 6 படையினரில் மூவரின் சடலங்கள் காட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மாவடி வேம்புக்கு மேற்குப் பக்கமாக உள்ள பிரப்பம் காட்டுக்குள் கடந்த திங்கட்கிழமை இரு சடலங்களும், செவ்வாய்க்கிழமை ஒரு சடலமும் மீட்கப்பட்டன.

காணாமற்போன ஏனைய மூன்று படையினரின் கதி இன்னும் தெரியவரவில்லை.

இந்தத் தாக்குதலில் 15 படையினர் உயிரிழந்ததாக அரசு அறிவித்திருந்ததும் தெரிந்ததே.

தற்போது காணாமற்போன படையினரிலும் மூவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பண்டயினரிலும் இருவர் பின்னர் ஆஸ்பத்திரியில் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ)

## மானிப்பாயில் மரணதண்டனை

யாழ்ப்பாணம், பெப். 8

மானிப்பாயைச் சேர்ந்த வை. சிறினிவாசன் (வயது 48) என்பவருக்கு மானிப்பாய் பகுதியில் வைத்து நேற்று தாங்கள் மரண தண்டனை விதித்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இவர் இராணுவத்துக்குக் காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக இத்தண்டனை வழங்கப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை புலிகள் கொல்வதாக குற்றம் சுமத்துகிறார் அனுருத்த

கொழும்பு, பெப். 8

'' தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பல்வேறு இடங்களில் மனித உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் பாரிய சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர். அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்து வருகின்றனர் ''

''விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் குறித்து பொது மக்கள் தைரியமாகப் படையினருக்கு அறிவிக்கின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சில இடங்களில் இ. தொ. கா. தனித்துப் போட்டி

கொழும்பு, பெப். 8

நுவரேலியா மாநகரசபைக்கும் அந்த மாவட்டத்திலுள்ள சில பிரதேச சபைகளுக்கும் அம்பகமுவ பிரதேச சபைக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் எனவும் —

ஏனைய இடங்களில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அதுபோட்டியிடும் எனவும்— இ,தொ.கா. தெரிவித்துள்ளது.

(இ-10)

## திங்களன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், பெப். 8

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்குத் 10ஆம் திகதி திங்கட்கிழமை பயணிகள் கப்பல் சேவை நடைபெறவுள்ளது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில், கப்பலில் பயணம் செய்வதற்குப் பதிவு செய்தவர்களில் இலக்கம் 188 க்கும் 202 க்கும், 409 க்கும்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. முடிவுகள் அடுத்த வாரம்

கொழும்பு, பெப். 8

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளியாகும். பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அடுத்த வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பரீட்சைப் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டு விடும் என்று கல்வி அமைச்சர் றிச்சேட் பத்திரன தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி கோரி விண்ணப்பிப்பதற்கான கால அவகாசமும் நீடிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். [இ-3]

### முச்சந்தி முரளி



குறுக்கு வழி சிலருக்கு கை வந்த கலை பாருங்கோ...!

## லட்சாதிபதியான இராணுவ கோப்ரல் கைது செய்யப்பட்டார்

சிறிலங்கா இராணுவத்தின் தேவைக்காக மோட்டார் உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்யும் போது அவற்றில் கமிஷன் பெற்று திடீரென லட்சாதிபதியாகிய இராணுவ விநியோகப் பிரிவைச் சேர்ந்த கோப்பரல் ஒருவர் இராணுவப் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கோப்பரல் கடந்த காலங்களில் சுமார் 30லட்சம் ரூபாவைக் கமிஷனாகப் பெற்றிருக்கிறார் என ஆரம்ப விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாக 'லங்காதீப' நாளிதழ் தெரிவிக்கிறது.

இவருக்குச் சொந்தமான பஸ், வான், ஓட்டோ ஆகியன கமிஷனாகப் பெற்ற பணத்திலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலையில் முக்கிய இலக்குகளை தாக்கி அழிப்பதற்குத் திட்டம்

### இருவர் கைது எனத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 8

திருகோணமலை நகரில் பல முக்கிய நிலையங்களைத் தகர்ப்பதற்கு திட்டமிட்ட இரு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களை மொறவேவா பொலீஸார் கைது செய்திருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறிமன், தமிழ் ஆகிய இந்த இரு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களும் செவ்வாய்க்கிழமை மொறவேவாவிலும் திருகோணமலையிலும் கைது செய்யப்பட்டார்கள்.

அவர்கள் மொறவேவா பொலீஸ் நிலையத்தையும் தொலைத் தொடர்பு மற்றும் மின்விநியோக நிலையங்களையும் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார்கள் என்றும் —

சிறிமன், சாள்ஸ் அன்ரனி அணியின் கிழக்குப் பகுதிப் பிரிவின் இரண்டாவது அணித் தலைவர் என்றும் —

தமிழ் என்பவர் திருகோணமலை விடுதலைப் புலிகள் இயக்க உளவுப் பிரிவுத் தலைவர் என்றும்— அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலையிலுள்ள தொலைத் தொடர்பு மற்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை குத்தகை விவகாரம் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது

திருகோணமலை, பெப். 8

திருகோணமலை நகர சந்தை குத்தகை தொடர்பாக எழுந்த பிரச்சினைகள், நெருக்கடிகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலை நகர சந்தையைக் குத்தகைக்கு விட நகரசபை தீர்மானித்து அறிவித்தல் விடுத்ததும் —

தமிழர் ஒருவர் அதிக கட்டணத்துக்குக் குத்தகை எடுத்து சந்தை வாடகையை அறவிட முயன்ற சமயம் திருகோணமலை இராணுவத் தளபதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி அந்தக் குத்தகை ஒப்பந்தத்தை ரத்துச் செய்து அறிவிப்பு விடுத்ததும் —

அதனை அடுத்து திருமலையில் பதற்ற நிலை ஏற்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பாராட்டும் வாழ்த்தும்

**05-02-1997 ஆம் திகதி முதல்**
யாழ். கல்வி வலயம் - I இன் கல்விப்பணிப்பாளராகச்
சிறப்புப் பதவி உயர்வு பெற்றுள்ள

**உயர்திரு**
**சு. இரத்தினராசா** அவர்களை
வராஹி அம்பாள் ஆசியுடன்
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**க. குகதாஸக் குருக்கள்**
**கி. பங்குச சர்மா**

**சஞ்சீவி மருந்தகம்**
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
(9259)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை இந்துமத குருபீடாதிபதி
''சிவாகமஞானி'', ''வித்தியாசாகரம்'', ''கலாநிதி''
**மறைதிரு சிவப்பிரம்மஸ்ரீ**
**ஸ்கந்த சாம்பசிவசிவாச்சார்யார்**

அவர்களின் மறைவு இந்துக் குருமார்கள் சமூகத்திற்கும் சைவசமய உலகத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கிச் சமர்ப்பிக்கின்றோம்.

பொருளாளர்
**இந்து குருமார் ஒன்றியம்**
யாழ்ப்பாணம்.
(45170)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
புகழ் பூத்த ஆசிரியர்களில் ஒருவரான
**அமரர்**
**அந்தோனிப்பிள்ளை மரியதாசன்**
அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்!

அவர் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தார் மற்றும் மாணவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**
[சி/96]

# மரண அறிவித்தல்கள்

## அரியகுட்டி குணசிங்கம்

அச்சுவேலி தெற்கு, ஸ்ரீவிக்னேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் பகுதியை வதிவிடமாகக் கொண்டவருமான அரியகுட்டி குணசிங்கம் அவர்கள் 21-1-97 இல் வன்னியில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதிகள் இராசமுத்து, நடேசு, திருமதி செ. சின்னமணி, திருமதி கி. நேசம், காலஞ்சென்ற திருமதி த. மனோன்மணி, திருமதி ந. துரைமணி ஆகியோரின் சகோதரர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னிப்பகுதியில் 23-1-97 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி ந. துரைமணி**
(சகோதரி)
தொகுதிப்பண்ணை,
கோப்பாய்.
(45169)

## செல்வி கந்தசாமி சாரதாதேவி

சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி கந்தசாமி சாரதாதேவி 6 - 2 - 1997 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமி பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், பத்மதேவி (அண்ணா தொழிலகம், இணுவில்), கமலாதேவி, விமலாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் விநாயகமூர்த்தி, வெற்றிவேலு, அரிராமா ஆகியோரின் மைத்துனியும், நந்தினி (வவுனியா), காலஞ்சென்ற சிவகுமார் (வெள்ளை), மாலதி, சுதா, கௌரி, கவிதா, கோகுலன், சோபனா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 7 - 2 - 97 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இணுவில் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
**ச. பத்மதேவி**
(அண்ணா தொழிலகம்)
(45167)

## செம்மணி மயானம் புனரமைப்பு

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் நீண்டகாலமாகப் பராமரிப்பு இன்றிப் பாவிக்கப்படாமல் உள்ள செம்மணி இந்து மயானம் புனரமைக்கப்படவுள்ளது.

மயானத்தின் எல்லைகளைச்சீரமைக்கவும், மயானத்துக்குச் செல்லும் பாதையைச்சீராக்கவும், வீதித் தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கவும் செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சங்கம் கூடித் தீர்மானித்துள்ளது.
(ஐ-15)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் - 1996**
**(கலாநிதி/ முதுமெய்யியல்மாணி**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1995/96 ஆம் கல்வியாண்டிற்கு பின்வரும் பாடநெறிகளுக்கு, பட்டப்பின் படிப்பிற்காகத் தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், அரசியல், கிறிஸ்தவநாகரிகம், வரலாறு, வர்த்தகம், தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், மொழியியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், முகாமைத்துவம்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 20/- இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 11-00/- பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச் சுய விலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **1997-3 6** ஆம் திகதிக்கு முன்பாக உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ். பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். **1997 - 03 - 06** ஆம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1994/1995 ஆம் கல்வியாண்டில் தமிழ், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடநெறிகளில் முதுமெய்யியல் மாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை மீண்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்.
1997. 02. 07
(சி/93)

## பிக்கு உடையில் இருந்தவரிடம் ரிவோல்வர் கைப்பற்றப்பட்டது

கொழும்பு பூகொட பகுதியில் கடந்த செவ்வாய் இரவு வானில் சென்ற சிலரை வழிமறித்துச் சோதனையிட்ட பொலீஸார், பிக்கு போன்று மஞ்சள் நிற உடை அணிந்து காணப்பட்ட ஒருவரிடமிருந்து வெளிநாட்டுத் தயாரிப்பு ரிவோல்வர் ஒன்றையும் ஐந்து ரவைகளையும் கைப்பற்றினர்.

அந்த வானில் மற்றும் இரண்டுபேர் பிக்குகள் உடையுடன் காணப்பட்டனர். மேலும் பத்துப் பேர் அந்த வானில் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(உ-150)

உ
**சங்கானை**
**நிகரை ஞான வைரவர் ஆலய**
**வருடாந்த**
# அலங்காரத் திருவிழா

ஆரம்பம்: **08 - 02 - 1997 சனிக்கிழமை**

காலை 9.00மணியளவில்விசேட ஸ்நபன அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மாலை 3.00 மணிக்கு வைரவ சுவாமி விசேட மேளவாத்தியம், விசேட சாத்துப்படியுடன் உள்வீதி, வெளிவீதி வலம் வரும் காட்சி தொடர்ந்து பதினைந்து திருவிழா தினங்களிலும் இடம் பெறும். 10 ஆம் திருவிழா 17-2-1997 திங்கட்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கு வைரவ சுவாமி திருமஞ்சத்தில் எழுந்தருளும் காட்சி இடம் பெறும். அலங்கார உற்சவ பூர்த்தி நாளான 15 ஆம் நாள் 22-2-97 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மகா சங்காபிஷேகம் இடம் பெற்று மாலை 3.00 மணிக்கு விசேட சாத்துப்படியுடன், விசேட மேளவாத்தியம் சகிதம் திருப் பொன்னூஞ்சல் இடம் பெற்று தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வைரவ சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து வைரவப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
**சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய**
**பரிபாலன சபையினர்.**
[9262]

# வாழ்த்துகின்றோம்

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளராகப் பதவி உயர்வுபெற்றுச் செல்லும் முன்னாள் உடுவில் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்
**திரு. சு. இரத்தினராசா**
அவர்களை மேலும் பல மேன்மைகள் பெற
வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**அலுவலக உத்தியோகத்தர்கள்.**
**யா/யூனியன் கல்லூரி,**
**தெல்லிப்பளை.**
(45172)

# இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
பேராசான்களில் ஒருவரான
**அமரர்**
**அந்தோனிப்பிள்ளை மரியதாசன்**
அவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்!

அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**
(சி/95)

# கண்ணீர் அஞ்சலி

கலாநிதி, சிவாகமசிரோன்மணி, சிவாகமஞானி,
மறைத்திரு சிவபிரம்ம ஸ்ரீ அநர்ஜோதி

**ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்**
(இந்துமத குரு பீடாதிபதி, நாயன்மார்கட்டு)

சிவாகமத் தொண்டில் சீராளனாக விளங்கி, சமயச் சிறப்பை நிலைநாட்டி, எங்கள் ஊருக்கும் பெருமை தேடித் தந்த சிவாச்சாரியாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

அன்னாரின் பாதக் கமலங்களில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் அவர் நாமம் வாழ்க!

**க. நா. சச்சிதானந்தனும் குடும்பத்தினரும்,**
அம்மன் கோயிலடி, சங்கானை.

**ராகுலசூரியன்ஸ்,**
பிரதான வீதி,
பருத்தித்துறை
(45173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு ரஷ்ய அணு உலை; மொஸ்கோவில் அடுத்தவாரம் பேச்சு?

இந்தியாவுக்கு இரண்டு அணு உலைகளை விற்பனை செய்வது என்ற ரஷ்யாவின் உத்தேச திட்டம் அடுத்த வாரம் மொஸ்கோவில் ஆராயப்படவிருக்கிறது.

ரஷ்யாவுக்கு 3 நாள் விஜயம் மேற் கொண்டு சனியன்று செல்லவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் இத்திட்டம் குறித்து மேலதிக தகவல்களைத் தெரிவிக்க மறுத்துள்ளார்.

உத்தேச திட்டத்துக்கு அமெரிக்கா தெரிவித்துவரும் எதிர்ப்புக் குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கவும் அவர் மறுத்துள்ளார்.

எனினும் இவ்விடயம் குறித்து அடுத்த வாரம் ரஷ்ய அதிகாரிகளுடன் குஜ்ரால் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# நச்சு ஆயுதத் தயாரிப்பை தடை செய்ய கோரிக்கை

## அமெரிக்கா விடுக்கிறது

வாஷிங்டன், பெப். 08

நச்சுவாயுவைப் பரப்பி அழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதை உலகில் தடை செல்யும் சட்டத்தை விரைவிய் நிறைவேற்றினால் மாத்திரமே ரஷ்யா தற்போது தயாரித்து வரும் ''நெர்கஸ்'' ஆயுதங்களை நிறுத்த முடியும் என அமெரிக்க நிர்வாகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இத்தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அமெரிக்கா உட்பட உலகில் நச்சு ஆயுதங்களைத் தயாரிக்கும் சுமார் 161 நாடுகளைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

மொஸ்கோ, பெப். 8

நிதி நெருக்கடி காரணமாக ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

ரஷ்யாவிடம் உள்ள அணு ஆயுதங்களைப் பராமரிக்க பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் பிளவுபட்ட பின்னர் ரஷ்யாவின் அணு ஆற்றல் பின்தள்ளப்பட்டுவிட்டது தெரிந்ததே. (இ)

## பூரண சூரிய கிரகணம்

புதுடில்லி, பெப். 8

பூரண சூரிய கிரகணம் அடுத்தமாதம் 9ஆம் திகதி நிகழவுள்ளது இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இதைப்பார்க்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சைபீரியா மற்றும் ஆர்டிக் கடல் பகுதியில்தான் இதைக் காண முடியும். (ஐ)

## உலக அரங்கில்

## 24 தமிழ்அகதிகள் தனுஷ்கோடிக்கு

எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த 24 ஈழத் தமிழர்கள் இராமநாத புரத்தில் உள்ள தனுஷ்கோடிக் கரைக்கு கடந்த இரண்டாம் திகதி வந்துசேர்ந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களில் 12 ஆண்களும் 9 பெண்களும் 3 குழந்தைகளும் அடங்குவர். தனுஷ்கோடிக் கரையில் இவர்களை இறக்கிவிட்ட படகு ஒன்று மீண்டும் திரும்பிச் சென்றுவிட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## கலவரத்தில் நால்வர் பலி!

ஜொகர்னஸ்பேர்க், பெப். 8

தென் ஆபிரிக்காவில் பல இன மக்கள் வாழும் ஜொகர்னஸ்பேர்க் நகரில் கடந்த வியாழனன்று காவல்துறைக்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஏழு வயதுச் சிறுவன் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென் ஆபிரிக்காவில் இடம்பெற்ற மிக்மோசமான இனக்கலவரம் இது எனக் கூறப்படுகிறது.

# பன்றி இருதயத்தை மனிதனுக்கு பொருத்திய டாக்டர்கள் கைது!

## அஸாம் மாநிலத்தில் சம்பவம்

கோஹாட்டி, பெப். 8

பன்றியின் இதயத்தை எடுத்து மனிதனுக்கு இருதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து சாதனை புரிந்ததாக அறிவித்த மூன்று மருத்துவர்கள் அஸாம் மாநிலத்தில் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

தானிராம் பருவா, சி. ஜே. ஜேம்ஸ் என்ற இரண்டு இந்திய மருத்துவர்களும், அவர்களுக்குத் துணையாக ஹொங்கொங் நகரிலிருந்து வந்த ஜொனதன் போ என்பவரும் இணைந்து 32 வயதான இந்தியர் என்பவருக்கு பன்றியின் இதயத்தை வைத்து அறுவைச் சிகிச்சை செய்துள்ளனர்.

உடல் உறுப்புகள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் அந்த நபர் நேற்று முன்தினம் மரணமானார்.

சத்திர சிகிச்சை செய்த டாக்டர்கள் மீது இறந்த நபரின் உறவினர்கள் வழக்குத் தாக்கல் செய்ததை அடுத்து அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ-10)

# அல்ஜீரியாவில் 28 பேர் பலி!

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்ஸில் இரு முஸ்லிம் பிரிவுகளுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் 28 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போது இராணுவத்தின் ஆதரவுடன்ஆட்சி நடத்தும் ஆட்சியாளர்களுக்கு எதிராக இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரவாதிகள் போராடிவருவது தெரிந்ததே.

ரப்ழான் ஆரம்பமான பின்னர் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 250 பேர் வரை அல்ஜீரியாவில் பலியாகி உள்ளனர்.

இஸ்லாமிய தீவிரவாதிகள் அரசுக்கு எதிரான தமது போரை ''புனித யுத்தம்'' என்று அழைத்து வருகின்றனர். (இ)

# பணயக்கைதிகள் பிரச்சினை 50 ஆவது நாளாக தொடர்கிறது

லீமா, பெப். 8

பெருநாட்டில் பணயக் கைதிகள் பிரச்சினை 50 ஆவது நாளாகத் தொடர்கிறது.

பெருவின் தலைநகர் லீமாவில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில் 400க்கும் மேற்பட்டவர்கள் பணயமாகப் பிடிக்கப்பட்டதும்--

படிப்படியாக அனேகர் விடுதலையாகி தற்பொழுது சுமார் 70 பேர் வரை பணயமாக வைக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

அரசின் பிரதிநிதிகள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று முன்தினம் போராளிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்—

போராளிகளுடன் சுமார் இரண்டரை மணிநேரம் பேராயர் யுவான் லூயிஸ் சுப்பிரியானி பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து பணயக்கைதிகள் விவகாரத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# ஜெயலலிதாவின் சொத்துக்களை முடக்கி வைக்க உத்தரவு

புதுடில்லி, பெப். 8

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் அவருக்கு நெருக்கமானவர்களுக்கும் சொந்தமான 43 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை நீதிமன்றம் முடக்கி வைத்துள்ளது.

மாநில அரசின் லஞ்ச ஒழிப்புப் பிரிவு தாக்குதல் செய்த மனுவின் அடிப்படையில் சென்னையிலுள்ள சிறு வழக்குகளுக்கான நீதிமன்றத்திற்கான தலைமை நீதிபதி டேவிட் கிறிஸ்ரின் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதற்கிடையே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி சசிகலாவிடம் நேற்று முதல்விசாரணை மீண்டும் ஆரம்பமாகியது. (ஐ-5)

## அலைமாட்டி அணைக்கட்டு வழக்கு:

# கர்நாடக அரசுக்குச் சாதகமாக இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, பெப். 8

கிருஷ்ணா நதியின்குறுக்கே அலைமாட்டி அணைக் கட்டுமானத்தை நிறுத்துமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட முடியாது என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த அணையைக் கட்டக் கூடாது என ஆந்திர உச்ச நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது. இத் தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்திருந்தது.

கர்நாடகத்தில் உற்பத்தியாகும் கிருஷ்ணா நதி ஆந்திரா ஊடாக கடலைச் சென்று அடைகிறது. இந்த நதியை மறிந்து கர்நாடக அரசு அலைமாட்டி அணையைக் கட்டி வந்தது. இந்த அணையைக் கட்டுவதால் ஆந்திராவுக்கு கிடைக்க வேண்டிய நீர் கிடைக்காது என்ற காரணத்தினால் ஆந்திர அரசு அணைக்கட்டு நிர்மாணத்தை நிறுத்துமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தது. (ஐ-10)

# விரும்பின் பிரிந்து செல்லும் உரிமை தமிழருக்கு வழங்கப்பட வேண்டும்

## தமிழக சஞ்சிகைக்கு வாசுதேவ பேட்டி

சென்னை, பெப். 8

''தமிழர்கள் விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலை. ஆனால் அதையே முடிந்த முடிவாகக் கொண்டு தமிழர்கள் தனிநாடாகப் பிரிந்து செல்வதை நாங்கள் விரும்பவில்லை.''

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் லங்கா சமசமாஜக் கட்சி எம். பியான வாசுதேவநாணயக்கார.

அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்திருந்த அவர் சென்னையில் வெளியாகும் ''தமிழன் எக்ஸ்பிரஸ்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு ஏற்படும் சூழ்நிலை இப்போது இல்லை. ஆனால் இது வரை நடந்து வந்த போராட்டத்தின் விளைவாக தமிழர்களின் உரிமையை ஏற்றுக் கொள்ளும் மனோபக்குவம் சிங்கள சமூகத்தில் ஒரு பகுதி மக்களிடம் மெல்ல மெல்ல ஏற்பட்டு வருகிறது. ''சண்டை போட்டு செத்து மடிந்தது போதும்; இனி மேல் சமாதானம் தான் வேண்டும்'' என்கிற மனப்போக்கு வந்து கொண்டிருக்கிறது.

1994 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த பொதுத் தேர்தல் வரலாற்றில் நடந்த தேர்தல்களிலேயே முக்கியமானதாகும். இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த மக்கள் கூட்டணி பெரு வெற்றி பெற்றது. தமிழர்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக தமிழ்க்குலப் பெண்களின் வழக்கப்படி சந்திரிகாவுக்குப் பொட்டு வைத்து போஸ்ரர் அடித்து வெளியிடப்பட்டது.

இலங்கையில் தற்போது ஆட்சியில் இருக்கும் மக்கள் கூட்டணி முழுக்க முழுக்க சிங்களவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் கூட்டணி அல்ல. தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க என்னைப் போன்று 15 பேராவது நாடாளுமன்றத்தில் எம். பிக்களாக உள்ளனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்பதில் சந்திரிகாவுக்கு உள்ள நல்லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் மீண்டும் போர் ஏற்பட்ட பின்பு இராணுவ நடவடிக்கையில் சிக்கிக் கொண்டார். அவர் அதைத் தவிர்ப்பதே நல்லது.

இராணுவமும் போராளிகளும் மோதிக் கொள்வதில் இரு தரப்பிலும் ஏகப்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தடைப்பட்டு பல ஆண்டுகளாகி விட்டன. அஸ்தமித்துவிட்ட அன்றாட வாழ்க்கைக்கு உயிர் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. விடுதலைப் புலிகள் ஆட்சி செலுத்தும் நிலப் பகுதிகளை தங்களது ஆளுகையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதிலேயே இலங்கை அரசு குறியாக இருக்கிறது.

எனவே பிரச்சினைக்குத்தீர்வு காண உடனே போர் நிறுத்தத்தை அறிவித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

குஜ்ரால் விஜயத்தினால் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படும் எனத் தோன்றவில்லை.

இலங்கையில் பன்னாட்டுக் கம்பனிகள் மிக வேகமாக உள்ளே வந்து கொண்டிருக்கின்றன. முக்கியமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கொரியா, பிரிட்டன் போன்ற நாடுகளின் கம்பனிகள் இலங்கைக்குள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் கம்பனிகள் இலங்கையின் வளத்தை வெளிநாட்டுக்குக் கொண்டு செல்வதுடன், இலங்கைஇனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தாமதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இப்படிச் செய்வதற்கு வியாபார நோக்கம் காரணமாக இருக்கலாம். தமிழர்களும், சிங்களவர்களும் இதைப் புரிந்து கொண்டு பன்னாட்டுக் கம்பனிகளை எதிர்க்க வேண்டும்.

— இவ்வாறு அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்திருக்கிறார் வாசுதேவ நாணயக்கார. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக ஆசிரியை
**திருமதி கௌரி இலட்சுமணராஜா**
அவர்களின் அருமைத் தந்தையார்

## அமரர் சரவணமுத்து இராஜேந்திரம்

அவர்களின் மறைவையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/ நாயன்மார்கட்டு**
**மகேஸ்வரி வித்தியாசாலை**

(45154)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 18 — 06 — 1925



உதிர்வு: 21 — 01 — 1996

## திருமதி அன்னபூரணம் செல்லையா

**திதி: 08-02-1997**

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து இறையடி சேர்ந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவால் துயருறும்:
அஞ்சுலா குடும்பம் (சுவிஸ்)
ஆறுமுகம் குடும்பம் (அவுஸ்திரேலியா)
செல்வரத்தினம் குடும்பம் (அச்செழு)

அச்செழு,
நீர்வேலி.

(45038)

## இறுதிப் பரீட்சை

யாழ். கல்வி வலயம் ஒன்றில் கடந்த ஆண்டு முறைசாராக் கல்விப் பிரிவில் தொழில் திறன் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பட்டதாரிகள் பயிற்சித் திட்டம்

1995 ஆம் ஆண்டுக்கான பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின் கீழ் தம்மை பதிவு செய்ய விண்ணப்பித்தவர்களில் யாழ். பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களது பதிவிலக்கங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்பித்த பட்டதாரிகள் தமக்குரிய கடிதங்களை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஐ)


# தேவை

**விற்பனை இலிகிதர்**

மின்சார உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ள, 25 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட விற்பனை இலிகிதர் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. கல்வித் தகைமைகள், முன் அனுபவம் போன்றவற்றுடன் 20 - 2 - 97 ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல. 581**
**மே / பா**
**உதயன் பணிமனை**
**யாழ்ப்பாணம்.**

(45133)



# அலுவலக நிர்வாகஸ்தர் தேவை

**யாழ்ப்பாணம் UNICEF நிறுவனத்திற்கு**

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பேசவும், எழுதவும் தகுதி வாய்ந்த அலுவலக நிர்வாகஸ்தர் தேவை.

அடிப்படைக் கல்வித் தகைமையுடன், வாகனம் ஓட்டுவதில் அனுபவம் அவசியம்.

சுயவிவரங்களுடன் **12 - 2 - 97** ஆம் திகதிக்கு முன் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

**Mrs. PENNY BRUNE,**
**19, Kandy Road, Chundukuli.** (சி/91)


# அறிவித்தல்

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

### எழுத்தாளர் - கலைஞர் விவரத் திரட்டு

★ இத்திணைக்களம் இலங்கையைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்களின் விவரங்களடங்கிய ஒரு தொகுப்பு நூலைத் தயாரித்து வெளியிட இருக்கிறது.

★ இத்தொகுப்பில் சேர்ப்பதற்காக இலக்கியம், நாடகம், இசை, நடனம், நாட்டுக்கூத்து, கிராமியக் கலைகள், சிற்பம், சித்திரம், வாத்தியம் முதலிய துறைகளில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்கள்/ கலைஞர்களிடமிருந்து அவர்களைப்பற்றிய சுயவிவரங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்பதாரர்கள் கீழே காணப்படும் மாதிரிப் படிவத்தில் விவரங்களை எழுதி, அண்மையில் எடுத்த சிறியளவு புகைப்படம் ஒன்றையும் இணைத்து, 1997 பெப்ரவரி 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, ''பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், கொழும்பு 07'' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

★ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''எழுத்தாளர் - கலைஞர் விவரத் திரட்டு'' எனக் குறிப்பிடவும்.

**திருமதி இ. கைலாசநாதன்,**
**பதில் பணிப்பாளர்,**
**இந்துசமய கலசார அலுவல்கள் திணைக்களம்.**

98, வோட் பிளேஸ்,
கொழும்பு 07,
16-01-1997.

மாதிரிப்படிவம்

**எழுத்தாளர்-கலைஞர் விவரத்திரட்டுக்கான சுயவிவரம்.**

01. எனது முழுப்பெயர்:- ..................................
02 புனைபெயர்கள் (இருப்பின் குறிப்பிடுக)
..................................................
03. பிறந்த திகதி:- ....................
04. கல்வித் தகைமை:- ..................................
05. நிரந்தர முகவரி:- ..................................
06. தற்போதைய முகவரி:- ..................................
07. தொழில் (ஓய்வு பெற்றிருந்தால், வகித்த பதவி, ஓய்வுபெற்ற திகதி முதலியவற்றைக் குறிப்பிடுக):-
..................................................
08. ஈடுபட்டுள்ள துறையையும் எவ்வளவு காலமாக ஈடுபாடு என்பதையும் குறிப்பிடுக:-
..................................................
09. ஈட்டியுள்ள சாதனைகள் (எழுதிய நூல்கள்/பத்திரிகைகள்/ கௌரவங்கள் / விருதுகள் / அரங்கேறிய முக்கிய நிகழ்ச்சிகள்/நாடகங்கள்/கச்சேரிகள்/கண்காட்சிகளில் இடம்பெற்ற சிற்பங்கள்/சித்திரங்கள் போன்ற விவரங்களை விளக்கமாகத் தருக)
..................................................
10. விவரத்திரட்டில் இடம்பெற வேண்டிய விசேட தகவல்கள் வேறு ஏதாவது.(இருப்பின்குறிப்பிடுக)

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..................... ..................................
திகதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி/89)

உ
சிவமயம்

# ★ விவாஹ சோபன முகூர்த்த அழைப்பு ★

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் தாது வருஷம் தை மாதம் 27 ஆம் நாள் (**09 - 02 - 1997**) ஞாயிற்றுக்கிழமை சதய நட்சத்திரமும் சித்தயோகமும் சேர்ந்த நன்நாளில் 12 மணி 03 நிமிஷம் முதல் 2 மணி 09 நிமிஷம் வரையுள்ள இடபலக்ன சுபமுகூர்த்த நல்வேளையில்,

எங்கள் குமாரி
**சௌபாக்கியவதி**
**ஹேமமாலினியை**

எங்கள் ஜேஷ்ட குமாரன்
**சிரஞ்சீவி**
**அரவிந்தசர்மாவுக்கு**

கன்னிகாதானம் திருமாங்கல்யதாரணம் பாணிக்கிரகணம் செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு, பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று சுபமுகூர்த்தம், ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கல்யாணமண்டபத்தில் நடைபெற இருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ தம்பதி சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுப மங்களம்

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும் ★

**சிவஸ்ரீ தா. முத்துச்சாமிக்குருக்கள்**
**சிவஸ்ரீ மு. விஜயகாந்தக் குருக்கள்**
**தம்பதிகள்**
கடைத்தெரு வேம்படி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

**சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்**
**தம்பதிகள்**
ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம் - இணுவில்
**பிரம்மஸ்ரீ இ. விசாக சர்மா அபிராமி**
**தம்பதிகள்.**

வரவேற்பு:-
மாசிமாதம் 6ஆம் நாள் (**17-02-97**) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணி

''மனோன்மணி வாசா''
சாந்தி தியேட்டர் அருகாமை
ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.
(மணமகள் இல்லம்)



(சி-69)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கந்தையா நாகரத்தினம்

எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. இ. மா. சிவசுப்பிரமணியம்**
அவர்களின் மாமியார் திருமதி க. நாகரத்தினம் அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**

(சி/85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# குடாநாட்டின் பல பகுதிகளிலும் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். குடாநாட்டில் காய்ச்சலின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

யாழ். போதனாவைத்திய சாலை பதிவேடுகளின்படி வெளிநோயாளர் பகுதியில் சரி, வார்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறுவோரில் 75 சதவீதமானவர்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது.

காய்ச்சல் காரணமாக தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் 120 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 20 பேர் சிறுவர்கள்.

சில தினங்களுக்கு முன் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட 9மாதக் கர்ப்பிணிப்பெண்ணான பூதப்பிள்ளை யோகமலர் (வயது 30) என்பவர் குழந்தை பிரசவித்த சில மணி நேரத்தில் மரணமானார்.

குழந்தை உயிர் தப்பி நிறை குறைந்த குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவருக்கு காய்ச்சல் வந்து 10 நாள்கள் எனவும்— தனியார் வைத்தியம் செய்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

மூன்று நாள் காய்ச்சல் என அனுமதிக்கப்பட்டு சில நிமிட நேரத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி அத்தியடியைச் சேர்ந்த ஜெயராசா நிரோஸ்கா (வயது 4) என்ற பெண் குழந்தையும் மரணமானது.

அதேசமயம் வலிகாமம் மேற்கு, தென். மேற்கு பகுதிகளில் மலேரியா காய்ச்சலினால்பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சங்கானை, தெல்லிப்பழை அரசாங்க வைத்தியசாலைகளிலும் மற்றும் தனியார் வைத்திய நிலையங்களிலும் மலேரியா காய்ச்சலுக்கு உட்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-15-145)

## டாக்டரின் "ஸ்ரெதஸ்கோப்" மாயமாக மறைந்தது!

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சம்பவம்

தென்மராட்சி, பெப். 8

டாக்டர் ஒருவர் தனது மேசையில் வைத்திருந்த ''ஸ்ரெதஸ் கோப்'' இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் அண்மையில் இடம் பெற்றது.

சம்பந்தப்பட்ட டாக்டர் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த மாகாண சுகாதாரப் பணிப்பாளரை வரவேற்பதற்காக அவர் தனது இருப்பிடத்தை விட்டு எழுந்து செல்லவேண்டி ஏற்பட்டது.

அவ்வாறு சென்றுவிட்டுத் திரும்பி வந்து பார்த்த போதே மேசை மீது வைத்துவிட்டுச் சென்ற ''ஸ்ரெதஸ் கோப்'' மாயமாக மறைந்து விட்டதைக் காணநேர்ந்தது. (ஐ-117)

## சர்வதேச நீதிமன்றத்தின் துணைத்தலைவராக இலங்கையர்

சர்வதேச நீதிமன்றத்தின் துணைத் தலைவராக இலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தோபர் வீரமந்திரி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

சர்வதேச நீதிமன்றத்தின் தலைவராக அமெரிக்கரான நீதியரசர் ஸ்ரீபன் ஸ்வெபெல் என்பவர் தெரிவு செய்யப்பட்டார். இவர் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இப்பதவியை வகிப்பார். திரு ஸ்வெபெல் கடந்த 1994ஆம் ஆண்டு முதல் சர்வதேச நீதின்றின் துணைத் தலைவராகச் செயலாற்றி வந்தார்.

1946 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் நியமிக்கப்பட்ட 15 சுயேச்சை நீதியரசர்கள் உறுப்பினர்களாகப் பணியாற்றுகின்றனர்.

அங்கத்துவ நாடுகள் சமர்ப்பிக்கும் பிணக்குகள் குறித்து விசாரித்து இந்த மன்றம் தீர்ப்புகளை வழங்குகிறது. (ஐ)

### விவேகானந்தரின் இலங்கை விஜயம்:

## நூற்றாண்டு ஞாபக முத்திரை யாழ். இந்துவில் வெளியிடப்பட்டது

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு நிறைவு ஞாபகார்த்த முத்திரை கடந்த திங்களன்று யாழ். இந்துக் கல்லூரியில் வைத்து வெளியிடப்பட்டது.

யாழ். இந்துக்கல்லூரி பதில்அதிபர் திரு. நா. உலகநாதன் தலைமையில் இந்த முத்திரை வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது. முதல் முத்திரையிடப்பட்ட உறையை யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா விடம் வழங்கினார்.

இவ் வைபவத்தில் தபால் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (ஐ)

## அ. அட்டையை தவறவிட்டதால் வகையாய் மாட்டிய திருடர்கள்!

### உடுப்பிட்டிப் பகுதியில் சம்பவம்!

யாழ்ப்பாணம், பெப். 8

வீடு ஒன்றில் கொள்ளையிடச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினரில் ஒருவர் அந்த வீட்டில் தனது அடையாள அட்டையை தவறவிட்டு வந்ததால் பின்னர் படையினரிடம் சிக்கிக் கொண்டார். திருட்டுப் போன ஒரு தொகைப் பணமும், பெறுமதியான பொருள்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சுவையான சம்பவம் உடுப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது.

இரவுவேளை இங்குள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற ஐவர் கொண்ட பிரஸ்தாப திருடர் கோஷ்டியினர் பொய்த் துப்பாக்கியைக் காட்டி வீட்டில் இருந்தவர்களைப் பயமுறுத்தி ரொக்கப் பணத்தையும், தங்க நகைகளையும் அபகரித்துச் சென்றனர்.

விடிந்ததும் வீட்டு உரிமையாளர் தனது வீட்டில் அடையாள அட்டை ஒன்றைக் கண்டெடுத்தார். அதனை அவர் படையினரிடம் காட்டி புகார் செய்ததை அடுத்து அந்த அடையாள அட்டைக்குரிய நபரை படையினர் கைது செய்து விசாரணை செய்ததில் திருட்டு அம்பலமானது. (ஐ-15)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, பெப். 8

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருப்போர் உட்பட தபால் மூலவாக்களிப்புக்காக விண்ணப்பித்துள்ள உத்தியோகத்தர்களின் தொகையைக் கருத்தில் கொண்டே இந்தத் திகதி நீடிப்பு வழங்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார் (ஐ)

## பல்கலைக்கழக பதிவாளராக குணராசா

யாழ். பல்கலைக்கழக பதிவாளராக கலாநிதி க. குணராசா தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

இவரது நியமனம் பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

பேரவை அனுமதி கிடைத்ததும் அனேகமாக மார்ச் மாதம் கலாநிதி குணராசா நியமனம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக் கழகத்தின் தற்போதைய பதிவாளர் கே. பரமேஸ்வரன் இம்மாதத்துடன் மீண்டும் அரசாங்க நிர்வாக சேவையில் இணைந்து கொள்வதாலேயே புதிய பதிவாளர் நியமனம் செய்யப்படுவதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-3)

## சம்பளம் இன்னும் இல்லை

தென்மராட்சி, பெப். 8

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர்களுக்கு டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குரிய சம்பளம் இதுவரை கிடைக்கவில்லை. (இ-117)

## பருத்தித்துறை துறைமுகத்தில் 2 கப்பல்கள்

வடமராட்சி, பெப். 8

ஒஸ்திரியா, டோனாகுளி ஆகிய இரு கப்பல்களும் மாறி மாறி பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கின்றன.

இக்கப்பல்களில் தனியாருக்கு கறி உருளைக் கிழங்கு, அப்பிள், வெற்றிலை உட்பட பல பொருள்கள் இறக்கப்படவுள்ளன. (இ-173)

## விமானம் மூலம் தபால்கள்

யாழ். குடாநாட்டுத் தபால்கள் தற்போது நாளாந்தம் விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார். இதில் முதலாம் வகுப்பு அஞ்சல் பொருள்களான சாதாரண கடிதம், கடுகதிக்கடிதம் வெளியூர்க் கடிதம்என்பனவே விமான மூலம் அனுப்பப்படுகின்றன.

பதிவுத் தபால் மற்றும் பெரிய பொதிகள் வாரத்தில் ஒரு தடவை கப்பல் மூலம் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)


## வீடு வாடகைக்குத் தேவை

**UNICEF நிறுவன** அலுவலக பாவனைக்கும், தங்குமிட வசதிக்கும் கோயில் வீதிக்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை.

கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

**Mrs. PENNY BRUNE,**
**19, KANDY ROAD, CHUNDUKULI.**

(சி/90)

## புலமைப்பரிசில்

எம்மால் 02 - 02 - 97 இல் நடத்தப்பட்ட 9 ஆவது பயிற்சிப் பரீட்சையில் முதன்மைப் புள்ளி பெற்ற **செல்வன் செ. சுஜாந்த்** அவர்களைப்

**பாராட்டுகிறோம்**

09 - 02 - 97 ஞாயிறு முதல் ஒவ்வொரு ஞாயிறும் வழமைபோல் பரீட்சை நடைபெறும்.

**BOND INSTITUTES**
**யாழ்ப்பாணம்.** (45168)

## யாழ். இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்க
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

9 - 2 - 97 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருந்த மேற்படி கூட்டம் எதிர்வரும் 15 - 02 - 1997 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு (இலங்கை நேரம்) குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். தவறாது சமுகம் தருமாறு பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செயலாளர்.**
**யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்.**

(சி/92)

## எண்பதாம் அகவையின் நிறைவாக

மலர்வு; 08 — 02 — 1917



உதிர்வு: 20 — 01 — 1997

அமரர்

## தோமஸ் செபஸ்ரியாம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், மாதகல்)

அகவை எண்பதை இன்பமாய்க் கொண்டாட
ஆவலாய்த் திட்டமிட்டுக் காத்திருந்த எங்களுக்கு
இறைவனின் திட்டம் இதுவல்ல என உணர்த்தி
ஈர்பத்து நாள்கள் இருக்கின்ற வேளைதனில்
உம் புனிதர் நாளினிலே உன்னதரின்
தாழ் அடைந்தீர்
ஊக்கமுடன் கற்பித்து உயர்வளித்த தந்தையே!
உங்களான்மா சாந்திபெற இறைவனை
வேண்டுகின்றோம்.

எங்கள் தந்தையின் மரணச்செய்தி கேட்டு எம்மை நேரில் சந்தித்தும், அனுதாபச் செய்தி அனுப்பியும், மலர்வளையங்கள் சமர்ப்பித்தும், பலவழிகளில் உதவிகள் புரிந்தும் இறப்பின் நிகழ்வுகளைச் சிறப்பித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், உறவினர்கள், சுற்றத்தோர், நண்பர்கள், அன்னாரின் பழைய மாணவர்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.**

321/7, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம். (45166)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதுமொடல் சிங்கர் தையல் மெசின், தறப்பாள், றிப் சுவிச் விற்பனைக்குண்டு. சு. கதிரித்தம்பி 16/5, சீனியர் லேன், கலட்டி அம்மன்கோயிலடி, வண்ணார்பண்ணை. (9257)

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9253)

நல்ல நிலையில் உள்ள 70 ஸ்ரீ லான்ட்மாஸ்ரர் புதிய பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சிவானந்தன் இல. 126/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (45120)

இறைச்சிக் கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Broiler Sales Centre, Thirunelvely. (9229)

ஹொண்டா CD200, 82 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய நீல மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; ஆ. இரட்னராஜா, இல. 21, கண்டிறோட், நாவற்குழி. (45164)

### மணமகன் தேவை

கிறிஸ்தவ, கௌரவ குடும்ப மணமகளுக்கு 30 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. சேவை. நம்பகம், விவாக சேவை இல. 51, வைமன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (45159)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. R. S K. பாம், 'முருகபதி', உடுவில், சுன்னாகம் (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி,) அல்லது R.S. K. பாம் தபாற் கந்தோர் வீதி, மானிப்பாய். (சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய்) (45050)

## சமுகம் தரவும்

**யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**சுன்னாகம்.**

1996 கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களை இவ்வாண்டுக்கான புகைப் படம் எடுக்க 10-02-97 காலை 9 மணிக்கு பாடசாலைக்கு சமுகம் தரவும்.

**கலை, வர்த்தக**
**மாணவர் மன்றம்.**

(45161)

## வாழ்த்துகிறோம்

யாழ். வலயம்-I இன் கல்விப்பணிப்பாளராக பதவி ஏற்கும்

### திரு. சு. இரத்தினராசா

அவர்கள் தம் சேவையை இனிதே புரிய, எல்லா வளமும் கிடைக்க இறைவனைப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

ESTD:-1973 REGD:- № J/7993
**The Express Institute**
IRUPALAI - KOPAY.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(45158)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/இராமநாதன் கல்லூரி

**1996 ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த**

| | | | |
|---|---|---|---|
| 1. | சொ. ஜீவகுமாரன் | 141 | புள்ளிகள் |
| 2. | ம. நிலக்ஷி | 134 | ,, |
| 3. | ஆ. கிரிஜா | 118 | ,, |
| 4, | ப. நிருபா | 109 | ,, |
| 5. | இ. அஞ்சலா | 108 | ,, |
| 6. | சி. தனுஷா | 107 | ,, |
| 7, | செ. மயூரன் | 105 | ,, |

ஆகிய மாணவர்களையும், அவர்கள் சித்திக்குக்காரணமான கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.
பழைய மாணவர் சங்கம்.

**யா/இராமநாதன் கல்லூரி,**
**சுன்னாகம்.** [சி/83]

## பாராட்டுகிறேன்

26-06-96 அன்று நரோமா கப்பலில் தவறவிடப்பட்ட எனது பிரயாணப்பை 6 மாதங்களின் பின் எனக்குக் கிடைத்தது. இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்ட யாழ். செயலக பொதுசன தொடர்பு அதிகாரிக்கும், ஏனையோருக்கும் நன்றி தெரிவித்துப்பாராட்டுகிறேன்.

**திருமதி கனகம்மா கணபதிப்பிள்ளை**

'மணி பல்லவம்,'
புலோலிதெற்கு,
புலோலி, (45155)

வடலியடைப்பு, பாரத்தனை

## ஐயனார் ஆலய மகா கும்பாபிஷேகம்

**(09—02—1997)**

நிகழும் மங்களகரமான தாது வருடம் தை மாதம் 27 ஆம் நாள் **(09 - 02 - 1997)** ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வரும் சுப முகூர்த்த நல் வேளையில், பூரண புட்கலை சமேத ஹரிஹரபுத்திர சுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதால் அத்தருணம் நடைபெறும் கிரியைகளில் கலந்து ஐயப்ப சுவாமியின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**பாரத்தனை ஐயனார் ஆலய**
**பரிபாலனசபை**

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (45139)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலரும் சங்க போசகருமாகிய
**உயர்திரு. பு. சுந்தரம்பிள்ளை**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி புண்ணியர் சின்னத்தங்கம்

அவர்கள் அமரத்துவம் எய்தியமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர்கள்**
**தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கம்,**
**தென்மராட்சி, சாவகச்சேரி.**

(சி/87)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 10 — 1927



மறைவு: 21 — 01 — 1996

திருமதி
### செல்வத்துரை செல்லப்பாக்கியம்
(இளையபிள்ளை)

'குபேரபுரி' மானிப்பாய் - கெருடாவில், தொண்டைமனாறு.

**திதி: பூர்வபக்க பிரதமை 08-02-1997**

1988 கார்த்திகை மாதம், அன்புக்கணவர் அமரத்துவம் அடைந்ததும் பெறாமகளுடனும், அக்காவுடனும் பிறந்த இடத்தில் இருக்கலாம் என்று கெருடாவிலுக்கு வந்து பல நூறு பணிவிடைகளைச் செய்து மனம்தேறி இருக்கும் பொழுது, காலன் 17 - 01 - 96 இல் குண்டு வடிவில் வந்து தாக்கி, அரசினர் மருத்துவமனையில் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து, 21-01-96 இல் உயிர் நீத்தார்.

அவரது மறைவால் துயருறும்:
**அக்கா, பெறாமகள், அக்கா-கணவர்,**
**ஒன்றுவிட்ட அண்ணர் மகன், உற்றார்,**
**உறவினர், அயலவர்.**

கெருடாவில்,
தொண்டைமனாறு. (45132)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 05 — 09 — 1960



இறப்பு: 09 — 01 — 1997

### அமரர் துரை தங்கவேல்

வளமிகு வளலாயில் வந்துதித்து
அக்காவின் அரவணைப்பில் வளர்ந்து
நிறைவான பூமியாம் நீர்வேலிகனில்
பண்பாளன் பசுபதி குடும்பத்திலே
வசந்தியெனும் வாழ்க்கைத் துணைதேடி
நிகரிலா நிச்சனுக்குத் தந்தையானாய்.
வெளிநாட்டு ஆசையினால் கொழும்பு சென்று
சுவிஸிலுள்ள மைத்துனராம் தர்மா ரவியுடன்
அன்பான பலகதைகள் ஆசையுடன் கதைத்திருக்க
பொல்லாத நோய் சொலலாமல் வந்ததென்ன!
திக்கெட்டும் திடுக்கிட உன்னுயிரைகவர்ந்தனனோ?
இன்று எம்மைத் தவிக்கவிட்டு இறைவனடி
சேர்ந்த விந்தை யென்னவோ?

அன்னாரின் இல்லத்தில் 08 - 02 - 97 சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

**மனைவி, மகன், உறவினர்.**

மாலை வயிரவர் கோயிலடி,
நீர்வேலி மேற்கு. (9239)

உ
**இணுவில்**

## ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்

# மஹா கும்பாபிஷேகம்

**காலம்: 09 - 02 - 97 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

★ **பூர்வாங்க கிரியைகள் 03 — 02 — 97** திங்கட்கிழமை ஆரம்பமாகின.

**இன்றைய ( 08 - 02 - 96 சனிக்கிழமை ) கிரியைகள்**

**காலை 9 மணி:**

விசேட சந்தியானுஷ்டானம், துவஜபூஜை, யாகபூஜை, பாவனாபிஷேகம், ஹோமம், ஸ்தாலிபாகம், சங்கியா ஹோமம், திரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பக்தர்கள் எண்ணெய் சாத்துதல்.

**மாலை 3 மணி:**

பூதசுத்தி, யாகபூஜை, விம்பசுத்தி, பிரதீசரம், பூர்வ சந்தானம், சுவர்ண நாடி சந்தான நவகண்ட ஸ்பர்சாகுதி, கும்ப[illegible] ஆசாரிய பூஜனம்.

(சி/68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவச் சாவுகள்

வெட்ட வடிவமான, இன்னது தான் என்று அடையாளம் காணப்படாத பொருளைத் தடிகொண்டு அடித்து விளையாடிய சிறுவர்களில் ஒருவர் மரணமானார்; இரண்டு பேர் காயமுற்றனர். ஊரெழு கிழக்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதே போன்று, இடம்பெயர்ந்த வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்த ஆரம்பத்தில், கடந்தவருடத்தில், அடையாளம் தெரியாத பொருள்கள் வெடித்து அவற்றை எடுத்து விளையாடிய சிறுவர்கள் பலர் இறந்ததுண்டு; காயமடைந்ததும் உண்டு.

வலிகாமம் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்து மீளக்குடியமர்ந்த புதிதில், மிதிவெடிகள் அவர்களின் உயிருக்குச் சவாலாக இருந்தன. நாளாந்தம் ஏதோ ஓர் இடத்தில் மிதிவெடி பொதுமக்களின் கால்களைக் கபளீகரம் செய்து கொண்டிருந்தது அது வேறு.

போர்க் காலத்தில் கைவிடப்பட்ட பல வகையான வெடிப்பொருள்கள் உருமாறி அடையாளம் காணமுடியாதவாறுபலஇடங்களிலும் சிதறி கிடக்கும் சாத்தியமுண்டு.

சிறுபிள்ளைகள் அவற்றினால் விளையக் கூடிய ஆபத்துகளை முன் உணர முடியாத நிலையில், விளையாட்டின் மீதுள்ள ஆர்வத்தால், விளையாட்டுத்தன மிகுதியால் உயிராபத்தை விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆறு வருட காலப் போரின் போது குடாநாட்டில் அவலமாகச் செத்த மக்கள் ஆயிரக்கணக்கு. அதற்கும் மேலதிகமாக இத்தகைய அவச்சாவுகள் தொடர்வது தமிழர் பரம்பரையை, அவர்களின் குடிசன எண்ணிக்கையை மேலும் குறைக்கஏதுவாகும்.

கைவிடப்பட்ட வெடிப் பொருள்களை முன்னேற்பாடாக அகற்றுவதிலும் பிள்ளைகள் கண்ட கண்ட இடங்களில் விளையாடாமல் தடுப்பதிலும் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தமது பிள்ளைகளின் நடமாட்டத்தில், குறிப்பாக வயது குறைந்த சிறுவர்கள் விளையாடப் போகும் இடம் குறித்து பெற்றோர்கள் கவனமாகஇருக்கவேண்டும்.

கண்ட கண்ட பொருள்களை, வழமைக்கு வித்தியாசமான பொருள்களை எடுத்து விளையாடுவதிலும், அவற்றை அடித்துப் பார்த்து அல்லது அதன் மீது கல்லெறிந்து பார்த்துச் சோதனை செய்து பார்ப்பதிலும் ஆர்வம் மிகுந்த பருவம் சிறுவர்களுடையது. அதிலே ஒரு வகை இன்பமும், மாறுபட்ட உணர்வும் அவர்களிடம் இருப்பதியல்பு.

அது மட்டுமன்றி, இரண்டொரு பேருக்கு மேல் சேர்ந்துவிட்டால் எதனையும் செய்துவிட வேண்டும் என்ற அசட்டுத் துணிவு கூட அவர்களிடம் பிறந்துவிடும்.

எனவே, காலத்தின் தேவையை உணர்த்தி, தங்கள் பிள்ளைகளுக்குப் புத்திமதி கூறி அடையாளம் தெரியாத பொருள்களை அணுகாமல் செய்யும் பொறுப்பு முழுக்க முழுக்கப் பெற்றோருக்கே உண்டு. வருமுன் காப்பதே புத்திசாலித்தனம். இழந்த பின் வேதனைப் படுவதால் எதுவும் ஆகாது.

மறைந்து கிடக்கக்கூடிய அடையாளம் காணமுடியாதவாறு உருமாறிய வெடிப் பொருள்கள் குறித்துக் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தைச் சிறுவர்களுக்கு எடுத்துரைத்துப் புத்திமதி கூறி, ஆசிரியர்களும் இது விடயத்தில் உதவவேண்டும்.

# மாநகரசபைகளுக்குச் சொந்தமான வாகனங்களை ஒப்படைக்க மறுப்பு!

## அவற்றைக் கைப்பற்ற செயலாளர்களுக்கு உத்தரவு

கொழும்பு, பெப். 8

கலைக்கப்பட்ட மாநகர சபைகளுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை கலைக்கப்பட்ட சபைகளின் முதல்வர்கள் மற்றும் உறுப்பினர்கள் இதுவரை கையளிக்காவிட்டால் அவற்றையும் அவற்றுக்குரிய உதிரிப்பாகங்களையும் கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு உள்ளூராட்சி, மாகாண சபைகள், சுதேசிய வைத்தியத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட உத்தரவிட்டிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த மாநகர சபைகளின் உறுப்பினர்களே சபை கலைக்கப்பட்ட பின்னரும் வாகனங்களை ஒப்படைக்காமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

மாநகர சபைத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காது சபைகளைக் கலைத்தது சட்டவிரோதமானது என்று ஐ. தே. கட்சி கருதுவதாகவும்—

எனவே சட்டவிரோத உத்தரவை ஏற்கவேண்டாம் எனவும்—

அதனால் உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்டதாக அரசு அறிவித்தாலும் அதனை ஏற்று வாகனங்களை ஒப்படைக்கவேண்டியதில்லை எனவும் —

சம்பந்தப்பட்ட சபைகளின் தலைவர்களுக்குக் கட்சி வட்டாரங்களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனினும் இந்தச் சபைகளுக்குச் சொந்தமான புல்டோஸர்கள், டிராக்டர்கள் பிரதேச செயலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டன.

ஏனைய வாகனங்களைப் பிரதேச செயலர்கள் கைப்பற்றுவதற்கு உதவும்படி பொலீஸார் கேட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது. (உ-150)

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 'ஹிண்டுஅயிட்ஸ்' சங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான கூட்டம் இன்று காலை 10 மணிக்கு(இலங்கை நேரப்படி) கல்லூரியில் நடைபெறும். (உ)

## தெல்லிப்பளை ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், பெப். 8

வலிவடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஓய்வூதியர்களுக்கான பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பளை, அளவெட்டி மல்லாகம் கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவ்வக் கிராமிய வங்கிகளுக்கும், ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவர்களது முகவரிக்கும் வவுச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

## மகளிர் இல்ல ஆண்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 8

தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பொருள்காட்சியும் நாளை ஞாயிறு முற்பகல் 9 மணிமுதல் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (ஐ)

## கிரனேட் வெடித்து சிறுவர் காயம்

கொழும்பு, பெப். 8

கிரான் வாழைச்சேனை வீதியில் நேற்றுக் காலை அநாதரவாகக் கிடந்த கிரனேட் ஒன்றை எடுத்து விளையாடிய சிறுவர்கள் அது வெடித்ததில் காயமடைந்தனர். (உ-150)

### உள்ளூராட்சி தேர்தலையொட்டி

# வடபகுதி முஸ்லிம் வாக்காளர்களை பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 8

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வெளியே வசிக்கும் முஸ்லிம் வாக்காளர்களைப் பதிவு செய்யும் வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் வாக்காளர்கள் தாம் தற்போது இடம்பெயர்ந்துள்ள இடத்தில் இருந்து வாக்களிக்க வசதியாக வாக்காளர் இடாப்பு திருத்தம் செய்யப்படுகிறது.

இதற்காக சுமார் 2ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களுக்கான ''பிஸி'' படிவங்கள் வடபகுதி முஸ்லிம்கள் தற்பொழுது பெருமளவில் தங்கி உள்ள புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணம் தேர்தல் பணிமனைக்கு சிபார்சுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

எனினும் குறிப்பிடப்பட்ட ''பிஸி'' படிவங்களில் புத்தளம் கிராம சேவை அலுவலர் எந்தவித சிபார்சையும் குறிப்பிட்டிருக்கவில்லை என்றும்—

இதனால் யாழ்ப்பாணம் தேர்தல் திணைக்களம் செய்வதறியாது திரிசங்கு நிலையில் இருப்பதாகவும் — அறியக்கிடக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1986 ஆம் ஆண்டுக்குப் பின் வாக்காளர் இடாப்பு திருத்தவேலைகள் இடம்பெறவில்லை.

1987 இல் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் கைவிடப்பட்டது.

புதியவாக்காளர்களைச் சேர்க்கவோ, தகுதியில்லாதவர்களை நீக்கவோ வழமையான வருடா வருடத்திருத்த வேலைகள் இடம்பெறாது 1986க்குரிய வாக்காளர் பட்டியலே இப்பேதும் தேர்தல் ஆணையாளரின் வருடாந்த அங்கீகாரத்துடன் நடைமுறையில் உள்ளது.

இதனால் தேசிய அடையாள அட்டை, வதிவிடச் சான்றிதழ் போன்றவற்றைப் பெறுவதில் இளம் வயதினர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (இ)

## தபால் அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு கடிதங்களை அனுப்புவோர் பலாலி வான் தபால் சேவை முகவரியையும் சேர்த்து முகவரியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார்.

கடிதங்களை அனுப்புவோர் முகவரியின் பின்னே மே/பா பலாலி வான் தபால் சேவை, த. பெ. இலக்கம் 553, கொழும்பு - 3 என எழுதுவதைத் தவிர்க்குமாறும், இவ்வாறு முகவரி இடப்பட்ட கடிதங்கள் உரியவருக்கு விநியோகிக்கப்படாமல் திரும்பி வந்த சேரும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

# யாழ். மக்களின் போக்குவரத்து பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

## நாடாளுமன்றில் யாழ். எம். பி. உரை

கொழும்பு, பெப். 8

கொழும்பு—யாழ். போக்குவரத்துக்கு சரியான வசதி இன்றி மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். எனவே இப்பிரச்சினையைத் தீர்க்க விசேட வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

யாழ். மாவட்ட ஈ.பி டி. பி. யின் எம். பி எஸ். சிவதாசன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சிவதாசன் மேலும் பேசியதாவது:

யாழ்ப்பாணத்தில் ஆட்கள் காணாமல் போவது அதிகரித்துள்ளது. படையினர் ஆட்களைக் கைது செய்தாலும் அவர்கள் எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைக் கூட உறவினருக்கு அறிவிப்பதில்லை.

இந்த விடயம் தொடர்பாக அரசு படையினருக்கு உரிய அறிவித்தல் வழங்க வேண்டும்.

வடக்கு — கிழக்கில் ஐயாயிரம் பேர்காணாமல் போயிருப்பதை ஜனாதிபதியே ஏற்றுக் கொண்டுள்ளார். இவர்களின் நிலைகுறித்து விசாரணை நடத்த காத்திரமான ஆணைக்குழு அவசியம்.

யாழ். குடாநாட்டில் இன்று 27 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது எமது மக்களின் போக்குவரத்துக்குப் போதுமானதல்ல. எனவே இந்தியாவிலிருந்து தருவிக்கப்படவுள்ள பஸ்களில் சில வற்றையாவது யாழ். குடாநாட்டிற்கு அரசு அனுப்பி வைக்க வேண்டும்.

யாழ். மக்களின் [illegible] மூலதனம் கல்வி. 21 ஆம் நூற்றாண்டுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் யாழ். மாணவர்களுக்கு கம்பியூட்டர் கல்வி வழங்கப்பட வேண்டும்.

யாழ். பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்குப் பரிசோதனைப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் அனுப்பி வைப்பதும் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தடை செய்யப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்திலும் விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் இரசாயனப் பொருள்களைக் கொண்டு ஒரு குண்டைக் கூட தயாரிக்க முடியாது எனப் புலிகள் கூறியுள்ளனர். அப்படியாயின் இரசாயனப் பொருள்களை அனுப்ப அரசு தயங்குவது ஏன்?

எமது எம். பிக்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட. வரவு — செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் வழங்கிய நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட கம்பியூட்டர்களை யாழ். கொண்டு செல்ல அமைச்சு வழி செய்து தரவேண்டும் — என்றார். (உ-150)

### நாளை

**தை 27**

**ஞாயிற்றுக்கிழமை**

**திதி:** துதியை

பிற்பகல் 5.17 வரை.

**நட்சத்திரம்:** சதயம்

பிற்பகல் 3.38 வரை.

றம்ழான் பெருநாள்

**ராகுகாலம்:** 5.05 - 6.35

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கூரைத் தகடுகள் அன்பளிப்பு

கொழும்புத்துறை, பெப். 8

நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையத்துக்கு அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கூரைத் தகடுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது நிலையத் தலைவர் திரு. க. தர்மலிங்கத்திடம் அவை கையளிக்கப்பட்டன. (ஐ 30)

## வாசகர் திருமுகம்

## பெறுபேறு எப்போது வரும்?

1996 ஆம் ஆண்டு ஆடி மாதம் (1995 விசேட பரீட்சை) நடைபெற்ற ஜி சீ ஈ. சாதாரண தர பரீட்சை பெறு பேறுகள் யாவும் வெளியிடப்பட்டு விட்டன. ஆனால் வானொலி தொழிநுட்ப பாடத்தின் பெறுபேறு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை. இது பற்றி சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரையும் விசாரித்த பொழுது ஏனோ தானோ என்ற நிலையில்தான் பதில் கிடைக்கின்றது. அனுப்பிவைப்பவர்களே ஏன் அனுப்பவில்லை? என்று கூட பதில்கள் வருகின்றன.

''குழந்தைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது'' என்ற பழமொழிக்கொப்ப என்னைப் போன்ற பரீட்சார்த்திகள் பெறு பேறுகளை அறியமுடியாது தவிக்கிறோம்.

வானொலி தொழிநுட்பப் பாடத்திற்குரிய பெறுபேற்றை அனுப்புவதில் தாமதம் செய்வதற்கு எக்காரணமும் இல்லை. மற்றைய பாடங்களைப் போலத்தான் இதுவும்; செய்முறைப் பரீட்சை கூட இல்லை. அதன் பெறுபேறு கிடைக்காத காரணத்தினால் தொடர்ந்து மேற்படிப்புப் படிக்க ஒரு பாடம் காணாமல் எத்தனையோ மாணவர்கள் தவிக்கிறார்கள்.

இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து எங்களுக்கு உதவி செய்வார்களா?

இ. கரன்

வடமராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் விமான சேவை தடையால் வெளிநாட்டு நிறுவனங்கள் பாதிப்பு!

## முதலீடுகளை விலக்குவது குறித்து ஆலோசனை

கொழும்பு, பெப். 8

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி உள்ளூர் தனியார் விமானப் போக்குவரத்துக்கு அரசு தடை விதித்திருப்பதால் இலங்கையில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் பல பாதிப்படைந்துள்ளதாகவும் —

இலங்கையில் தாம் செய்த முதலீட்டை விலக்கி வேறு ஆசிய நாடுகளில் புதிய முதலீடுகளைச் செய்வது குறித்து அந்த நிறுவனங்கள் ஆலோசித்து வருவதாகவும் —

கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் திகதி முதல் உள்ளூர் தனியார் விமானப் போக்குவரத்துச் சேவைக்கு அரசு தடை விதித்திருந்தது.

இந்தத் தடை காரணமாக இருபதுக்கும் அதிகமான ஹெலிகளையும் சிறிய போக்குவரத்து விமானங்களையும் வைத்திருந்த லயன் எயர், லங்கா எயர், கீல்ஸ் ஏவியேஷன், மகாராஜா எயடாக்ஸி சேர்விஸ், ஸ்கைஸ்காப், ஏய்க்கின் ஸ்பென்ஸ் எயர் சேர்விஸ் ஆகிய நிறுவனங்கள் பாதிப்படைந்தன.

எனினும் குடாநாடு, தீவுப்பகுதி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினருக்கு தெற்கே சென்று வரத் தரைப்பாதை ஏதும் இல்லாததால் — அவர்களுக்காக அதிகவிமானசேவைகளை ஈடுபடுத்த வேண்டியிருந்ததால் — வேறு வழியின்றி பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் துருப்புகள் மற்றும் பொதுமக்கள், பொருள்களை ஏற்றியிறக்க லயன் எயர் நிறுவனத்தின் ஏ. என். 24 ரக விமானங்களை மட்டும் சேவையில் ஈடுபட அரசு அனுமதி அளித்தது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா விமானப்படை அண்மையில் ஏ. என். — 32 ரக விமானங்களைப் பெற்றுக் கொண்டதாகக் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதே சமயம் —

கண்டியில் பெரும் முதலீடு செய்துள்ள அமெரிக்க நிறுவனம் ஒன்று கண்டியிலிருந்து கட்டுநாயக்கா வரை தமது தயாரிப்புப் பொருள்களைத் தனியார் விமான சேவை மூலம் எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கும்படி அரசை வற்புறுத்தி வருவதாகத் தெரியவருகின்றது. (உ-150)

### மானிப்பாயில் . .

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

டதாகத் தெரிவித்துள்ள புலிகள், இவர் வழங்கியதாகக் கூறப்படும் தகவல்களால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் வெளியிட்டுள்ளனர்.

எமது ஆதரவாளர்கள் பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.—

மானிப்பாய்ப் பகுதியில் எமது பாவனையில் இருந்த எமது முகாமைக் காட்டிக் கொடுத்து, அங்கிருந்த இராணுவ உபகரணங்கள் இராணுவத்தால் கைப்பற்றப்படுவதற்குக் காரணமாக இருந்துள்ளார் —

சித்தன்கேணியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவதற்கு என மறைந்திருந்த எமது இயக்கப் போராளிகள் பற்றிய தகவலை இராணுவத்திற்கு வழங்கியமையால் எமது கிளைமோர் கண்ணிவெடி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.—

எமது போராளிகளின் நடமாட்டங்களையும் செயற்பாடுகளையும் பற்றிய தகவல்களையும் வழங்கியுள்ளார்.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் சில படை அதிகாரிகளின் பெயர்களையும் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

''எதிரியின் அற்ப சலுகைகளுக்கும் ஆசைவார்த்தைகளுக்கும் உட்பட்டு காட்டிக் கொடுப்புகளில் தொடர்ந்தும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்; இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை அத்தகைய தொடர்புகளைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.'' — என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### மக்களை . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றனர்''.

— இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை நேற்று முன்தினம் மாலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அமைதியாக வாழும் மக்களின் நாளாந்த வாழ்க்கையை சீர்குலைத்து நிலைகுலையச் செய்வதே புலிகளின் திட்டம்.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் தமது நாசகாரச் செயல்களை புலிகள் விஸ்தரிக்க மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

எனவே தான் அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் செயற்படுத்தப்படுவதும் —

மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்படுவதும் —

அவசியமாகின்றது. — என்று அவர் மேலும் கூறினார். (உ- 5)

## 4 ஆவது ஆண்டு நினைவு



பிறப்பு: 14 — 04 — 1910

இறப்பு: 08 — 02 — 1993

**அமரர் கந்தையா கனகையா**

(முன்னாள் மனேஜர், மனோகரா தியேட்டர்)

(நாடகமாமணி)

என்றும் உங்கள் நினைவோடிருக்கும்

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

136, கண்டி வீதி,
கண்டுக்குளி.

(45162)

### 'நடிகமணி' நூல் வெளியீடு

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய ''நடிகமணியின் வாழ்வும் அரங்கும்'' என்னும் நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 21 ஆம் திகதி காலை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. [ஐ]

### நூல் வெளியீடு

கொழும்புத்துறை, பெப். 8

யோசப்பாலா எழுதிய ''மகிழ்ச்சியின் இரகசியம்'' எனும்நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெறும்.

விழாவுக்கு யாழ். ஜெயம் தலைமை வகிப்பார்.

வெளியீட்டுரையை கலாநிதி க. குணராசாவும், கருத்துரையைச் சறோஜா - சிவச்சந்திரனும் நிகழ்த்தவுள்ளனர். (இ-30)

### திருமலையில், .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின் விநியோக நிலையங்களைத் தகர்ப்பதற்கு தமிழ் திட்டம் வகுத்திருந்தார் என்றும் —

மொறவேவா பகுதியில் படையினர் மீதும் பஸ், லொறிகள் மீதும் தாக்குதல் நடத்துவதற்கான திட்டங்களை வகுக்கும் பொறுப்பு சிறிமனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-4)

### திங்களன்று. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

461 க்கும் இடைப்பட்ட பட்டியல்களில் உள்ளோரும் —

492, 494, 495, 496, 497, 498, 499, 500, 521 ஆம் இலக்கப் பட்டியல்களில் உள்ளோரும் — இக்கப்பலில் பயணம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் அன்று காலை 7-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (அ)

## தேர்தல் திகதி குறித்து கிறிஸ்தவர்கள் அதிருப்தி

கொழும்பு, பெப். 8

உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்த மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதற்கு மறுதினமான வெள்ளிக்கிழமை கிறிஸ்தவ மக்களின் புனிததினமான பெரிய வெள்ளிக்கிழமை ஆகும்.

தேர்தல் நடைபெற்ற மறுதினமே தேர்தல் முடிவுகள் வெளியாவதும் அன்றைய தினம் ஊரடங்குச்சட்டத்தை அமுல் படுத்துவதும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

இவ்வாறு பெரிய வெள்ளிக்கிழமையன்று ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டால் அது கிறிஸ்தவ மக்களின் உபவாசம், வழிபாடு என்பவற்றைப் பாதிக்கும். இதனால் தேர்தல் நடத்தப்படும் திகதி குறித்து கிறிஸ்தவ மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர் என வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (இ10)

### சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகியது. தொடர்ந்து விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் திருவிழா நடைபெற்று, 16 ஆவது நாள் பூர்த்தி அடையும்.

திருவிழாக் காலத்தில் பிற்பகலில் நாடு நலம்பெற, மக்கள் மன நிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டி கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது. (அ-30)

### திருமலை . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் தெரிந்தவையே.

இந்த விவகாரத்தை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தலைமையில் கடந்த வாரம் கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் திருகோணமலை நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தி உட்பட பல பிரமுகர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தமிழருக்கு வழங்கப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது என்றும் —

நகர சந்தைக்கான வரியை நகரசபையே நேரடியாக அறவிடுவது என்றும் —

அதற்கு இராணுவமும் பொலீஸும் பூரண பாதுகாப்பு வழங்குவது என்றும் —

சமரச யோசனை ஒன்று இக்கட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்த யோசனை குறித்து ஆராய்வதற்காக திருகோணமலை நகரசபையின் விசேட கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு நகரசபைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந்த யோசனைப்படி நகரச் சந்தையின் கட்டுப்பாடு நகரசபையின் கீழ் முற்றாக வரும் என்றும் —

அதற்குரிய பாதுகாப்பை இராணுவத்தினரும், பொலீஸாரும் வழங்குவர் என்பது தொடர்பான உறுதிமொழி ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்டிருக்கின்றது என்றும் —

நகரசபைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து சமரச யோசனையை ஏற்பது என நகரசபை நேற்று முடிவு செய்தது.

இதனால் இப்பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காணப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-150)

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 8

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் 1996 ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

### வன்னி . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகருமா? அல்லது கிளிநொச்சி வீதியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் இலக்கு நோக்கி முன்னேறுமா? என்பது தெரியவில்லை என்றும் அந்த வானொலி குறிப்பிட்டது.

இதற்கிடையில் —

வன்னிப்பகுதியில் புலிகளின் பிடியிலிருந்த பிரதேசத்துக்குள் 22 கிலோமீற்றர் தூரம் வரை முன்னேறிச் சென்றுள்ள படையினர் அங்கு தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் தமது நிலைகளைத் தொடர்ந்து பலப்படுத்தி வருகின்றார்கள் என 'ரூபவாஹினி' நேற்றுமாலை அறிவித்தது.

இராணுவ நகர்வுக்கு இராணுவத்தின் பீரங்கிப் படைப் பிரிவும், விமானப் படையும், கடற்படையும், ஆதரவளித்து வருவதாகவும் —

முன்னேறும் படையினருக்கு புலிகள் தரப்பிலிருந்து எதிர்ப்பு அதிகம் இருக்கவில்லை என்று படைகளின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது எனவும் —

ரூபவாஹினி மேலும் குறிப்பிட்டது.

இந்த நடவடிக்கையின் போது படையினருக்கு இதுவரை ஆள்சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் ஏதும் இல்லை.

பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கு சேதங்கள் ஏற்பட்டனவா என்பதையும் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை,

ஆனால் —

வவுனியாவுக்கு மேற்கே உள்ள ஒரு கிராமத்தை இராணுவம் பீரங்கிகளால் தாக்கி வருவதாகவும் —

இந்தத் தாக்குதலில் குறிப்பிட்டளவு பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனவும் —

லண்டனில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது. (உ-4-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 08 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org